1981 மார்ச் 27]

ஊத்தங்கரைப் பகுதியில் கிடைக்கும் செம்புத்தாது

* வினா எண் 522—திரு. க. இர. சின்னராசு: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதிகளில் செம்பு கிடைக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அங்கு எவ்வளவு செம்பு கிடைக்கிறது ?

(இ) அதை எடுக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம். தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை பகுதியை அடுத்த சாமல்பட்டிக்கு அருகில் போக்கம்பட்டி மற்றும் மோட்டு சூலக்கரை கிராமங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் விட்டு விட்டு அமைந்துள்ள செம்பு கனி அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

(ஆ) மற்றும் (இ): முழுமையான ஆய்வுகளிலிருந்து கிடைக்கப்பட்ட அறிக்கையின்படி ஆழ் துறப்பண துளைகளிலிருந்து எடுக்கப்பட்ட தாதுவின் மாதிரிகள் இரசாயன சோதனைகளில் மிகக் குறைந்த அளவு செம்புத்தாது (0·1—0.2% விழுக்காடு) மட்டுமே கொண்டிருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தச் செம்புத்தாது அமைப்பு, பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என கைவிடப்பட்டது.

திரு. க. ரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரைப் பகுதியை அடுத்த சாமல்பட்டிக்கு அருகில் செம்பு கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்றபோது 0.2% விழுக்காடு கிடைக்கின்றது என்று சொல்லி, அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். மேலும் நமது அரசு அப்பகுதியை நல்ல முறையில் விரிவாக ஆய்வு செய்வதற்கு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையிலே அங்கே 0.2% விழுக்காடு இருக்கின்றது என்ற முடிவிற்கு வந்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. எனவே, அதைத் திரும்பவும் ஆய்வு செய்யும் உத்தேசம் இல்லை.

தோட்டி, கொம்பன், ஜோதி சமுதாய மக்களை பழங்குடி மக்களாக அறிவித்தல்

*வினா எண் 523—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் வசிக்கும் தோட்டி, கொம்பன், ஜோகி என்றழைக்கப்படும் தெலுங்கு பேசுகின்ற காட்டுநாயக்கன் சமுதாய மக்களை, பழங்குடி மக்களாக அறிவிக்குமாறு தஞ்சை, திருச்சி மாவட்ட மகாசபையின் தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா ?